சுருக்கம்

நில வருவாய் – நிலவரி சீர்திருத்தக்குழு– நிலவரி சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை பரிசீலித்து பாசன மேம்பாட்டு வரியை (Betterment Levy) நீக்கம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய் [வ.நி. 1 (1)] துறை

அரசாணை (நிலை) எண். 547

நாள் 20.10.2010
ஐப்பசி 3, திருவள்ளுவர்
ஆண்டு 2041.

படிக்கவும்:

(1) அரசாணை (நிலை) எண்.223, வருவாய்த்துறை, நாள் 07.07.2009.
(2) முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். வ.நி 6(1)15583/2009, நாள் 6.5.2010 மற்றும் 9.7.2010.

***

ஆணை:–

2009–2010–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலவரி விதிப்பு முறையை எளிமைப்படுத்தவும், கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகளில் உரிய மாற்றங்கள், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) முறையினை சீரமைக்கவும், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் நிலவரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்து பார்வை ஒன்றில் அரசாணை வெளியிடப்பட்டது.

2. இக்குழு தனது அறிக்கைகளை பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதங்கள் மூலம் அரசுக்கு சமர்ப்பித்தது. இக்குழுவின் பல்வேறு பரிந்துரைகளுடன் மேம்பாட்டு வரியை நீக்குவது குறித்து பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது:–

"நிலவரியைத் தவிர வேறு எந்த வரிச்சுமையையும் விவசாயிகளின் மீது சுமத்தப்படக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் பாசன மேம்பாட்டு வரியையும் ரத்து செய்யலாம்".

த.பி.பா.

Verified RedEstate

3. நிலவரி சீர்த்திருத்தக் குழுவின் பரிந்துரையை கவனமாகப் பரிசீலனை செய்து அதனை ஏற்று பாசன மேம்பாட்டு வரியினை (Betterment Levy) 1420–ஆம் பசலி ஆண்டிலிருந்து நீக்கம் செய்தும், 1419ம் ஆண்டு வரை வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ள பாசன மேம்பாட்டு வரியை தள்ளுபடி செய்தும் இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சென்னை–5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர், சென்னை–5.
நிலச் சீர்த்திருத்த ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநில கணக்காயர் சென்னை–18/35.
நகல்:
பொது (கடும் மந்தனம்) துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறை, சென்னை–9.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சேப்பாக்கம், சென்னை–5.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Verified by RealEstate